# நாகப்பட்டினம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(14.04.2017 முதல் 18.04.2017 வரை)

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை– 612 101**

போன்: 0435 2472098 E-mail: dirtrri@tnau.ac.in Fax: 0435 2472881


==========================================================================

**தேதி:13.04.2017**

## கடந்த 2 நாட்களில் நிலவிய வானிலை (11.04.2017– 12.04.2017)

| காரணிகள் | கடந்த நாட்களில் வானிலை |
|---|---|
| மழை (மி.மீ.) | 0.0 |
| அதிகபட்ச வெப்பநிலை (°C) | 35 – 38 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°C) | 27 – 29 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 3 – 6 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 72 – 84 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 6 – 8 |

## அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு

| காரணிகள் | எதிர்பார்க்கப்படும் வானிலை | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1<br>14.04.2017 | நாள் 2<br>15.04.2017 | நாள் 2<br>16.04.2017 | நாள் 4<br>17.04.2017 | நாள் 5<br>18.04.2017 |
| மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 0 | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை (°C) | 38 | 38 | 38 | 37 | 37 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°C) | 27 | 27 | 27 | 27 | 27 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 3 | 3 | 3 | 3 | 3 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 65–80 | 65–80 | 65–80 | 65 –77 | 65 –77 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 6 | 6 | 6 | 6 | 6 |
| காற்றின் திசை | தென்கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு |

14.04.2017 முதல் 18.04.2017 வரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மழை இல்லை.

***வேளாண் அறிவுரைகள் :***

**பயிர் : நெல், உளுந்து, பச்சைப்பயறு மற்றும் பருத்தி**

**பருவம் : நெல் தரிசு பயறு: முதிர்ச்சி பருவம்.**

- அடுத்து ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலை காணப்படுவதால் கரும்பு, எள் மற்றும் நெல் தரிசுப் பருத்திக்கு சீராக நீர் பாய்ச்சவும்.
- நெல் தரிசு உளுந்து பயிரானது தற்போது முதிர்ச்சி நிலையில் உள்ளதால் முதிர்ந்த காய்களை பறித்து உலர்த்த வேண்டும் அல்லது செடியினை வேரோடு பிடுங்கி குவித்து வைத்து உலர்த்தவும்.
- உளுந்து விதைகளை சுமார் 9– 10 சதம் ஈரப்பதத்திற்கு வரும் வரை காயவைக்கவும். சேமிப்பின்போது வண்டுகள் தாக்காமலிருக்க 100 கிலோ விதையுடன் ஒரு லிட்டர் வேப்ப எண்ணெய் அல்லது ஒரு கிலோ ஊக்குவிக்கப்பட்ட களிமண்ணுடன் கலந்து சேமிக்கலாம்.
- கோடை சித்திரை பட்டத்தில் இறவை உளுந்து விதைப்பு செய்யவும். இப்பருவத்தில் விதைப்பு செய்ய ஆடுதுறை 5 உகந்த இரகமாகும்.

**இயக்குநர்**